# வள்ளல் ஏழூர்

## சிந்துநடைக் கூத்து

16

சைவப்புலவர் சு. செல்லத்துரை

31

உ

# வள்ளல் ஏழூர்

சிந்துநடைக் கூத்து

பொது சன நூலகம்
27 DEC 2000
மாநகராட்சி
யாழ்ப்பாணம்

சைவப்புலவர் சு. செல்லத்துரை

(904)

இளவாலை

மெய்கண்டான் மகாவித்தியாலயஸ்தாபகர்

## வள்ளல் ஏழூர் இராசரத்தினம்

அவர்களின்

ஐம்பதாவது நினைவு விழா வெளியீடு


பழைய மாணவர் சங்கம்

1999-11-22

*பிரமாதி வருடக் கார்த்திகைத் தீப நாள்*

1432 (P) CC

# வள்ளல் ஏழூர்



பாட்டுடைத் தலைவன் சிலையும்
பாடிய புலவன் நிலையும்.

# பதிப்புரை

பாடசாலைகளை ஸ்தாபித்தவர்களை நினைவு கூருகின்றவர்களின் எண்ணிக்கை இன்று அருகிவருகின்றது. இதனால் மாணவ சமுதாயத்திடம் பாடசாலைகளின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றின் அறிவு, உணர்வு இல்லாமல் போய்விட்டது.

இக்காலத் தேவை உணர்ந்து எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும் சைவப் புலவரும் பாடசாலையின் பழைய மாணவனும் ஆகிய திரு. சு. செல்லத்துரை அவர்கள் இப் பாடசாலை ஸ்தாபகரின் வாழ்க்கை வரலாற்றை எல்லாரும் இலகுவில் அறியக் கூடிய வகையில் சிந்துநடைக் கூத்துவடிவத்தில் தந்துள்ளார்கள்.

ஒரு பாடசாலை எவ்விதமாக கட்டி எழுப்பப்பட்டு வழி நடத்தப் படுகின்றது என்பதை பாடசாலைச் சமூகம் அறியும் போது, அதனால் அவர்களுக்கு அப்பாடசாலையில் பற்றும், அதனைப் பேணும் உணர்வும் ஏற்படும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

இந்நூல் நாடகவடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளதால் எல்லோரும் அதன் கருப் பொருளை இலகுவில் விளங்கிக் கொள்ளமுடியும்.

இந்நூலின் வாயிலாக நூலாசிரியர் ஏழூர் வள்ளலின் வள்ளல் தன்மை, பிறர்க்காகவாழும் தன்மை, எல்லோரும் அறிவுடையராக வேண்டும் என்னும் சிந்தனை, சைவமும் தமிழும் வாழ்ந்து வளர்ச்சியடைய வேண்டும், ஏதிலிகள் கல்வியறிவு பெறவேண்டும் என்ற நல்நோக்கங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இம் முயற்சியை எமது சமூகம் வரவேற்கும் என்பது எனதுநம்பிக்கை.

இதனை ஸ்தாபகரின் ஐம்பதாவது நினைவு விழாவில் வெளியிடுவதும் அதே நேரம் ஆசிரியர்களே பாத்திரங்களை ஏற்றுப் பாடி ஆடி கூடி நடிப்பதும் சிறப்பான செயற்பாடாகும்

யா/இளவாலை மெய்கண்டான் ம. வி
இளவாலை.
1999-11-22

அ. பேரம்பலம்
அதிபர்
தலைவர்
பழைய மாணவர் சங்கம்.

# வாழ்த்துரை

சைவமும் தமிழும் தழைத்தோங்க 1922ம் ஆண்டில் அமைக்கப் பட்ட யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், தனது தாபகரின் ஐம்பதாவது நினைவு தினத்தைக் கொண்டாடும் முகமாக அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை ஒருசிறு நாடக நூலாக வெளியிட முற்பட்டமை போற்றுதற்குரியது.

எமது குடும்ப வரலாற்று நூலிற்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தாபகரின் வரலாற்றைக் கற்பனைக்கிடமின்றி வரலாறாக எடுத்துக் காட்டுவதுடன் சிந்து நடைக் கூத்துப் பாணியில் அமைத்து பார்ப்போரின் உள்ளத்தில் ஒரு புத்துணர்வை ஊட்டக் கூடியதாக இருப்பது சிறப்பம்சமாகும்.

இந்நூலை இப்பாடசாலையில் 24 வருடங்கள் அதிபராயிருந்து பாடசாலையை மிக உன்னத நிலைக்கு கொண்டு வந்தவரும் கலைத் துறையில், சிறப்பாக நாடகக்கலையில் பல சாதனைகளைப் படைத் தவருமான சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் எழுதி இருப்பது பெருமைக்குரியது.

இந்நூலை வாசிப்போர், கூத்தைப் பார்ப்போர் இதயங்களில் தாமும் இத்தகைய செயல்களில் ஈடுபட்டு சமுதாயத்தின் முன்னேற் றத்திற்கு உழைக்க வேண்டும் என்ற மனப்பாங்கை ஏற்படுத்து மாயின் அதுவே பெரும் பேறாக அமையும்.

மெய்கண்டான் சகல கலைகளிலும் வளர்ச்சியுற்று உன்னத நிலையை அடைய வாழ்த்துக்கள்.

வாழ்க மெய்கண்டான் வளர்க அதன் கல்விச் சேவை.

மயிலிட்டி கலைமகள் ம. வித்.
உடுவில்.

திருமதி இருபாசக்தி
தர்மதாசன்
ஸ்தாபகரின் ஏகபுத்திரி.

# அணிந்துரை

ஈழத்தமிழ் மக்களுடைய தேசியக் கலைவடிவமாகத் திகழ்வது நாட்டுக்கூத்தாகும். நீண்டகாலமாக இம்மண்ணின் அணிகலமாகத் திகழ்ந்துவரும் இக் கூத்து வடிவம் சிறிதுகாலம் புறக்கணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு ஆங்கிலக் கல்வியின் வருகையையும் திரைப்படங்களின் பாதிப்பையும் காரணங்களாகக் கொள்வர். ஆயினும் 1960 பதுகளிலிருந்து பேராசிரியர் சு. வித்தியானந்தனின் அருமந்த முயற்சியினால் கூத்துக்கலை மீண்டும் மறுமலர்ச்சி பெறலாயிற்று.

ஈழத்தமிழருக்குரிய தனித்துவமான கூத்துவடிவங்களைப் பின்வருமாறு வகுத்துக் கூறலாம். அவையாவன; வடமோடி, தென்மோடி. வடபாங்கு, தென்பாங்கு, கதை வழி.

கதைவழி என்பது கதை சொல்லும் பாதை / நெறியாகும். கதையைச் சொல்வது போல பாடி ஆடி நடித்த காரணத்தால் இது இப்பெயர்பெற்றதெனக் கொள்ளக்கிடக்கின்றது. கதைவழிக் கூத்துகளில் ஒன்று தான் காத்தவராயன் கூத்து வடிவமாகும். பழைய கூத்து ஏடுகளில் 'கதைவழிக் கூத்தாகிய காத்தவராயன்' என்றே எழுதப்பட்டுள்ளது.

இன்று கதைவழி எனும் பெயர் மறக்கப்பட்டு, சிந்துநடைக் கூத்து எனும்புதுப்பெயர் பெற்றுள்ளது. சிந்து நடை எனும் பெயர் இக்கூத்திற் பயிலப்படும் பாடலை மையமாகக் கொண்டெழுந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு சிலர் கருதுவது போல இக்கூத்திற் கையாளப்படும் நடிப்பினோரங்கமாகிய ஆடலையல்ல.

> "சிந்திசையிற் பாடலிசைத்து — நாங்கள்
> சிங்காரமானதொரு நடைநடந்து"

இக்கூத்தை நடத்துவோம் எனக் காத்தவராயன் கூத்திலேயே இதற்கு அகச்சான்றுண்டு.

மேற்படி சிந்து நடையில் பல ஆண்டுகளுக்கு முன்னர், காத்தவராயன் கூத்துமட்டுமன்றி 'கோவலன் கூத்து' 'ஆரவல்லி நீரவல்லி' 'பவளக்கொடி' ஆகிய கூத்துக்கள் இருந்தன. இக்கூத்துக்குரிய பழைய ஏடுகள் இன்றும் அரியாலையில் உள்ளன.

எண்பதுகளிலிருந்து காத்தவராயன் கூத்து மீண்டும் மறுமலர்ச்சி பெற்று யாழ்.குடா நாடெங்கும் ஆடப்பாடலாயின. இதனைத் தொடர்ந்து புதுப்புது நாடகங்களும் இக்கூத்துப்பாடல் யாப்பில் எழலாயின. இவற்றைச் சிந்துநடையிலமைந்த கூத்துக்கள் எனக் குறிக்குமுகமாக சிந்துநடைக்கூத்து எனப் பெயரிட்டழைக்கலாயினர்.

என். கே. ரகுநாதனால் எழுதப்பெற்று அம்பலத்தாடிகளால் மேடையேற்றப்பட்ட "கந்தன் கருணை"யே சமூகப்பிரச்சினையை மையமாகக் கொண்ட முதலாவது சிந்துநடைக்கூத்தாகும். இது நூலுருவாகவும் வெளிவந்துள்ளது. இதனையடுத்து எழுந்த கூத்துத்தான் களத்தில் காத்தானாகும். இவற்றைத்தொடர்ந்து பல சிந்து நடைக் கூத்துக்கள் எழுந்த போதும் அவையனைத்தும் நூலுருப் பெறவில்லை. அண்மையில் நவாலியூர் செல்லத்துரை எழுதிய "சின்னவனா பெரியவனா" எனும் சிந்து நடைக்கூத்து இரண்டாவதாக நூலுருப்பெற்றுள்ளது. இப்பொழுது மூன்றாவது நூலாக 'வள்ளல் ஏழுர்' எனும் சிந்து நடைக்கூத்து நூல்வடிவம் பெற்றுள்ளது.

'வள்ளல் ஏழுர்' எனும் கூத்து நூலாசிரியர் சைவப்புலவர் சு. செல்லத்துரை நல்லதொரு தமிழறிஞர்; யாப்பறி புலவர்; கல்விமான்; சைவப்பற்றும் தமிழ்ப்பற்றுமுடையவர்; சிறந்தபண்பாளர். இவர் படைத்த நூலே இதற்குத் தக்கதோர் உரைகல்லாகும்.

ஒரு காலத்தில் மதமாற்றங்கள் இடம்பெறச் சைவமும் தமிழும் நலிவடையக் கண்ட எம் பெரியவர்கள் ஆங்காங்கே சைவப்பாடசாலைகளைநிறுவி அரும்பணியாற்றினர். அத்தகைய பரோபகாரிகளுள் ஒருவர் தான் யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தை நிறுவிய வள்ளல் ஏழுர் இராசரத்தினமாவர்.

இவருடைய வரலாற்றை எவ்வித கற்பனையுமின்றி உள்ளவாறு அரியதொரு கூத்தாக நூலாசிரியர் தந்துள்ளார். தானங்களுட் சிறந்தது "வித்தியாதானமென்பர்" இத்தானத்தை மனமுவந்தளித்த வள்ளல் ஏழுரார்க்கு நன்றி செலுத்து முகமாக இந்நூல் அமைந்த போதும், பாடசாலை நிறுவனங்களது வரலாற்றை நிலை நிறுத்தும் முயற்சியாகவும் உள்ளது.

பலவகையான நாடகங்களை எழுதி மேடையேற்றிய அனுபவம் படைத்தவர் சைவப்புலவர் சு. செல்லத்துரையவர்கள். அதனை இக்கூத்து நூல் முழுவதும் காணமுடிகிறது. இந்நாடகத்தில் இவர் கையாளும் உத்திமுறை இதற்குத்தக்க சான்றாகும்.

ஏழூர் இராசரத்தினம் அவர்கள் காணியும் கட்டிடங்களும் வழங்கி இலவசமாக கல்வியூமூட்டியமை, நாவலர் வழிவந்த கல்விப்பணியாகும். இலங்கையில் இலவசக்கல்வியை கன்னங்கராதான் அறிமுகம் செய்தவரென்பர். இதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே பாடசாலைகளை அமைத்து இலவசக்கல்வியூட்டியவர் நல்லை நகர் நாவலர் என்பதை மறக்கவோ மறுக்கவோ முடியாது. அவர்வழி வந்த ஏழூர் இராசரத்தினம் இந்துபோட் இராசரத்தினம் ஆகியோர் போற்றுதற்குரியவர்கள். இந்நூலிலும் இவ்விரு இராசரத்தினங்களும் போற்றப்படுகின்றனர்.

அருமையான இனிய சிந்துநடையில் இந்நூல் அமைந்துள்ளது ஆசிரியரது கவித்துவத்தை எடுத்துக்காட்டும் இந்நூலில் பாடசாலைக்கு ஓடு போடுவதற்குப் பணமில்லாத போது இராசரத்தினம் கவலையடைந்த போது தனது தாலிக்கொடியைக் கொடுத்து உதவிய திருமதி இராசரத்தினம் அம்மையாரின் உயரிய பண்பை சொல்லுமிடத்தில் என்னுடைய உள்ளம் நெகிழ்ந்துவிட்டது.

> ""நீ அதிசயமான தெய்வப் பெண்ணம்மா — உன்தியாகத்தின்
> நிழலிற் கூட நாம் நிற்கமுடியாது""

எனும் ஆசிரியர் கூற்று உண்மைதான். இவ்வள்ளலின் வழியில் அவர்தம் புத்திரியும் இன்று செயலாற்றி வருவதையறிந்து மனமகிழாதிருக்க முடியுமா?

'வள்ளல் ஏழூர்' எனும் இக்கூத்து நூல் அரியதொரு படைப்பு இத்தகைய நூல்களை இந்நூலாசிரியர் மேலும் படைத்துத் தமிழ் அன்னையை அலங்கரிப்பாராக.

கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை

359 / 30 நல்லலட்சுமி அவென்யூ
கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

உ
சிவமயம்

# வள்ளல் ஏழூர்

சிந்துநடைக் கூத்து

## நாடகப் பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| ஏழூர் | – | இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய நிறுவனர் வள்ளல்ஏழூர் இராசரத்தினம் |
| சின்னப்பிள்ளை | – | ஏழூரின் துணைவி |
| கிருபாசக்தி | – | ஏழூரின் மகள் |
| கனகசபாபதி | – | ஏழூரின் தம்பி |
| கனகராயர் | – | ஏழூராருக்கு உதவியாயிருந்த நண்பர் அப்புக்காத்து |
| சிவசுப்பிரமணியம் | – | ஏழூராருக்கு உதவியாயிருந்த கல்விமான் |
| மாணவர்கள் | – | மணி, வாணி, முருகன், தம்பு, குணம், செல்வி, கண்ணன், குமார். |
| தேவி | – | பாடசாலையில் பிள்ளையைச் சேர்க்கப் போகும் தாய் |
| கலையழகி | – | பாடசாலையில் சேரப்போகும் மாணவி |
| மற்றும் | – | அதிபர், ஆசிரியர்கள், தாய், தந்தை |

# வள்ளல் ஏழூர்

## சிந்துநடைக் கூத்து

### காப்பு

ஞானவிநாயகனே - ஜெய ஜெய
நன்மைகள் செய்பவனே
ஆனைவிழுந்தானில் - இருந்தருள்
ஆட்சி புரிபவனே.

மெய்கண்ட வள்ளல் ஏழூர் - கதையினை
மேன்மையுடன் நடிக்கக்
கைகண்ட காவலனே - தொழுதோம்
கருணை புரிவாய் ஐயா.

ஆனந்தத்தாண்டவத்தால் - மெய்கண்டானை
ஆளும் நடராசனே
ஞானக் கலைவடிவே - சரஸ்வதி
நல்லருள் செய்வீர் அம்மா.

ஆசையுடனே நாங்கள் - பாடியே
ஆடிநடிக்க வந்தோம்
தேசம் புகழ்ந்திடவே - எமக்கருள்
செய்திடுவீர் தொழுதோம்

# 1

*(தாய் தேவியும் மகள் கலையழகியும் பாடசாலை போதல்)*
*(வைகைக்கரை தேடியல்லோ ... என்ற மெட்டு)*

கலை: பாடம் படிக்கப் போறேன் அம்மாவே கேளும் - நானும்
பள்ளிக்கூடம் போகப்போறேன் அம்மாவே கேளும்

நல்லதொருபள்ளியிலே அம்மாவே என்னை - நீங்கள்
நல்ல நாளில் சேர்த்திடுவீர் அம்மாவே கேளும்.

தேவி: கண்மணியே என்மகளே கலையழகே வாடி - உன்னைக்
கல்விகற்க வைத்திடுவேன் கண்மணியே வாடி

மெய்கண்டான்பள்ளியிலே என்மகளே உன்னை நானும்

மேன்மையுடன் சேர்த்திடுவேன் என்மகளே வாடி

(வசனம்) எனதருமை மகளே கலையழகி, உன் விருப்பப் படியே உன்னை நான் கல்வி கற்ற மேன்மை மிக்க மெய்கண்டானில் கல்வி கற்க வைப்பேன். இப்போதே செல்லலாம்; என்னோடு வா மகளே.

கலை: அப்படியே ஆகட்டும் அம்மா இதோ வருகிறேன்.
*(புத்தகப் பையுடன் போதல்)*

தேவி: மெய்கண்டானை நோக்கியல்லோ என்மகளும் நானும் - இப்போ
மிகவிரைவாய் போகிறோமே என் மகளும் நானும்

கலை: அம்மா கற்ற பள்ளியிலே நானும் கல்விகற்க – அங்கே
ஆசையுடன் போகிறோமே அம்மாவும் நானும்

தேவி: (வசனம்) - இதோ மெய்கண்டான் பள்ளிக்கூடம் வந்து விட்டோம். வா உள்ளே போவோம்.

கலை: ஆகா! என்ன அழகான இடம் அம்மா

*(முத்தான மகனே வாய்திறந்து ......... என்ற மெட்டு)*

அழகான நல்ல சோலை அம்மா - நல்ல சேலை அம்மா
இந்த அதிசயத்தை அம்மா பாரேன் அம்மா.

தேவி : சோலை இது கல்விச் சாலையடி - கல்விச்சாலையடி
நீயும் கல்விகற்கும் கல்விச் சோலையடி

கலை: தாமரைப்பூ அம்மா தாமரைப்பூ பெரியதாமரைப்பூ
அதன் தாற்பரியம் தாயாரே சொல்லிடுவாய்

தேவி : தாமரைமேல் கல்வித் தெய்வமடி -
தாயார் சரஸ்வதியார்,
என் தன் தங்கமே நீ வீழ்ந்து வணங்கிடடி

கலை: தங்கச்சிலை அம்மா தங்கச்சிலை - இந்தத் தங்கச்சிலை
வந்த செய்தி சொல்வாய்

தேவி: தங்கமனம் கொண்ட வள்ளலடி - ஏழூர் வள்ளலடி அவர்
தந்தஇந்தக் கல்விச் சாலையடி.

கலை: வள்ளல் ஏழூர் கதை சொல்லிடம்மா -
கதைசொல்லிடம்மா இந்தப்
பள்ளிக் கூடக்கதையும் சொல்லிடம்மா

தேவி : (வசனம்) என் மகளே கலையழகி, இந்தமெய் கண்டான் கல்விச்சாலையை நிறுவித்தந்த வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்களின் கதை தான் இந்தப் பள்ளிக் கூடக்கதையும்- அதோ வள்ளல் ஏழூரரைப் பார் மகளே.

## 2

(ஏழூர் இராசரத்தினம் அவர்கள் வருகை)
(நானும் ஆதிசிவன் மைந்தனல்லோ ............
என்ற மெட்டு)

ஏழூர்: நானும் இளவாலை மண்ணின் மைந்தன் - இங்கு
ஏழூர் என்று சொல்லுவார்கள் என்னை எல்லோரும்
இந்த மண்ணில் எல்லோரும்

ஏழூரில் சொந்த முண்டு - இங்கு
எண்ணில்லாத ஏழைகளின் பந்தமுமுண்டு - அவர்
சிந்தனை உண்டு

எல்லோரும் கற்கவேண்டும் - இங்கு
ஏழை எளியோரும் கல்வி கற்றிட வேண்டும் - அறிவு
பெற்றிட வேண்டும்

(பிள்ளைகள் போய்க் கொண்டிருத்தல்)
(வசனம்) ஏழைச் சிறுவர், சிறுமியர்கள் எத்தனை பேர் இங்கு கல்விகற்க வசதியின்றி வீணே திரிகிறார்கள் இவர்களுக்கு வயதும் உடலும் வளர்கின்றனவே அன்றி கல்வி அறிவுவளராத காட்டு மிராண்டிகளாக வல்லவோ வரப்போகிறார்கள்

(கண்டுவந்தேன் அம்மா கண்டுவந்தேன் ... ... என்ற மெட்டு)

சிவா: சிந்தனை ஏன் ஏழூர் சிந்தனை ஏன் - உனக்கு
வந்ததுயர் என்ன சொல்லிடுவாய்

கனகர்: நாமிருக்க மனம் வாடலாமோ - ஏழூர்
நமக்குரைப்பாய் உனக்கு வந்ததுயர்

ஏழூர்: (வசனம்) அதோ! அதிலே போகின்ற பிள்ளைகளைப் பார்த்தீர்களா

சிவா: ஆமாம். அவர்கள் பாடசாலைக்குப் போவதில்லையோ

கனகர்: அவர்களைக் கூப்பிடுங்கள் என்ன காரணம் என்று கேட்டறிவோம்

ஏழூர்: பிள்ளைகளே அன்புப்பிள்ளைகளே - இங்கு
வந்திடுவீர் இங்கு வந்திடுவீர்

(பிள்ளைகள் ஒவ்வொருவராக வருதல்)

மணி: ஏன் அழைத்தீர் ஐயா ஏன் அழைத்தீர் - எம்மை
அழைத்த செய்தி ஐயா எமக்குரைப்பீர்

சிவா: (வசனம்) மணி! நீர் ஏன் பாடசாலைக்குப் போகவில்லை

(மலராய் மலரெடுத்து ... ... என்றமெட்டு)

மணி: சைவரென்று சொல்லி என்னை - ஐயாவே என்னைத்
தாம் சேர்க்க மாட்டோமென்றார்

சிவா: (வசனம்) - கிறிஸ்தவ பாடசாலையானதால் சைவர்களைச் சேர்க்க மறுத்து விட்டார்களோ

கனகர்: (வசனம்) வாணி நீ ஏன் பாடசாலைக்குப் போகவில்லை

வாணி: மதம்மாற வில்லையென்று - ஐயாவே என்னை
மறுத்துரைத்துக் கலைத்துவிட்டார்

கனகர்: (வசனம்) மதம் மாறவில்லையென்று கலைத்து விட்டார்களா

ஏழூர்: (வசனம்) - முருகா; நீ ஏன் படிக்கப் போகவில்லை

முருகன்: நெற்றியிலே நீறழித்து - ஐயாவே என்னை நிந்தித்துக்கலைத்துவிட்டார்.

சிவா: (வசனம்) - உனக்கு என்ன நடந்தது தம்பு

தம்பு: காற்சட்டை ஊத்தை என்று - ஐயாவே என்னை கடிந்துரைத்துக் கலைத்துவிட்டார்.

சிவா: (வசனம்) - பாவம். வேறு காற்சட்டை இல்லையா?

கனகர்: (வசனம்) - குணம்! நீ பள்ளிக்கூடம் போவதில்லையா?

குணம்: உணவுமில்லை உடையுமில்லை - ஐயாவே எனக்கு ஒரு வழியும் தெரியவில்லை.

கனகர்: (வசனம்) - செல்வி! உனக்கு என்ன நடந்தது.

செல்வி: காசு கட்டவில்லையென்று - ஐயாவே என்னைக் கலைத்துவிட்டார் அடித்தடித்து

ஏழூர்: (வசனம்) - அப்படியாயின் நீங்கள் இனி என்ன செய்யப் போகின்றீர்கள்.

எல்லோரும்: படித்ததினிப் போதுமென்று - பெற்றவர்கள் எம்மை உழைத்துவர வேண்டுமென்றார்.

எமக்குதவ ஆருமில்லை - ஐயாவே நீங்கள் ஏதும் வழி செய்திடுவீர்.

ஏழூர்: (வசனம்) - பிள்ளைகளே நீங்கள் கலங்கவேண்டாம் உங்களுக்கு உடையும் உணவும் தந்து, புத்தகமும் தந்து நீங்கள் இலவசமாய்க் கல்வி கற்க நாங்கள் வழி

செய்வோம் - நீங்கள் கலங்காதீர்கள்.
ஏழை மக்கள் கல்விகற்க நண்பர்களே நாங்கள் ஏதும் வழி தேடவேண்டும்.

(வசனம்) நண்பர்களே, வாருங்கள், வீட்டில் போய் ஆறுதலாக யோசிப்போம்.

சிவா: (வசனம்) - இங்கிருப்பவை எல்லாம் கிறீஸ்தவப் பாடசாலைகள் ஆதலால் சைவப்பிள்ளைகளுக்கு அங்கு இடமில்லை. அங்கு கற்பதானால் பணம் வேண்டும், மதம் மாறவேண்டும், அல்லது சைவப் பண்பாட்டைக் கைவிடவேண்டும். ஆதலால் இவர்களின் கல்விக்கு நாம்தான் வழிசெய்ய வேண்டும்.

கனகர்: (வசனம்) இந்த நிலைமையைப் பார்க்க வேதனையாக இருக்கிறது.

*(சத்தியத்தை கங்கைதட்டாதே ...... என்றமெட்டு)*

சிவா: எங்கள் தமிழ் மன்னர் ஆண்ட பூமி - இது
எங்கள் தமிழ் சைவம் செழித்த பூமி

கனகர்: எங்கிருந்தோ வந்த பறங்கியரால் - இங்கு
எங்கள் பண்பாடெல்லாம் சிதைந்ததையா.

(வசனம்) -1505 இல் இங்கு போர்த்துக்கேயர் வரமுன்பு எல்லோரும் சைவர்களாகவே இருந்தார்கள். அன்று தமிழ் மன்னர் ஆட்சியில் சைவர்கள் தலை நிமிர்ந்து வாழ்ந்தார்கள். இங்கு வியாபாரத்துக்காக வந்த போர்த்துக்கேயப் பறங்கிகள் எங்கள் சைவாலயங்களை இடித்துத் தரைமட்டமாக்கிச் சைவப் பண்பாட்டையும் சிதைத்து விட்டார்கள்.

சிவா: பறங்கி பின்னால் வந்த ஒல்லாந்தரும் - எங்கள்
பண்பாடெல்லாம் சிதைத்துப் பாழடித்தார்.

கனகர்: அவர்கள் பின்னே வந்த ஆங்கிலரும் - எம்மை
ஆசைகாட்டி மிக மோசம் செய்தார்.

சிவா: (வசனம்) - பறங்கியரின் பின்வந்த ஒல்லாந்தரும் அவர் பின் வந்து ஆட்சி செய்யும் ஆங்கிலேயரும் எங்கள் மதத்தை, மொழியை அழித்துச் சுதந்திரத்தைப் பறித்து அடிமைத்தனத்தைப் புகுத்திவிட்டார்.

ஏழூர்: எங்கள் தமிழ் சைவம் சுதந்திரமும் - இங்கு
எல்லாம் பறிபோதல் பார்த்திடவோ

நல்லைநகர் தந்த நாவலரின் - வழியில்
நாம் தொடர்வோம் நல்லகல்விப் பணி.

(வசனம்) - நாவலர் பெருமான் காட்டிய வழியில் நாமே சைவப் பாடசாலை ஒன்று தொடங்கினாலென்ன.

கனகர்: சைவத்தமிழ்ப் பாடசாலையொன்றை - நீங்கள் தொடங்கிடுவீர் இளவாலையிலே

சிவா: தோள்கொடுப்போம் நாங்கள் துவளவிடோம் - நீங்கள் தொடங்கிடுவீர் சைவப் பாடசாலை.

ஏழுர்: (வசனம்) - நல்லது நண்பர்களே எதிர்வரும் விஜயதசமி நாளில் பாடசாலையைத் தொடங்குவோம்.

(ஏழுர்மனைவி சின்னப்பிள்ளை நீர்மோர் கொணர்தல்

சின்னப்: களைத்து விட்டீர்கள். இதோ நீர் மோர் பருகுங்கள்

ஏழுர்: பெண்ணே நாம் கதைத்ததெல்லாம் கேட்டாயா

சின்னப்: (வசனம்) – நன்றாகக் கேட்டேன். மிக உயர்ந்தபணி தொடங்க உள்ளீர்கள்.

உங்கள்பணி மிக உயர்ந்தபணி — ஐயா
ஓங்குகவே உயர்ந் தோங்குகவே

உங்களுடன் நானும் சேர்ந்திணைந்தே — அதில்
என்னாலான எல்லாம் செய்திடுவேன்.

(கலையழகியும் தேவியும்)

கலை: (வசனம்) - இவர்கள் தான் இந்தப் பாடசாலையை ஆரம்பித்தார்களா அம்மா.

தேவி: ஆமாம், கனகராயர், சிவசுப்பிரமணியம் முதலானவர்களுடைய ஒத்தாசையுடன் ஏழுர் இராசரத்தினம் அவர்கள் 1922 இல் சிவசுப்பிரமணியத்தின் கிட்டங்கியில் ஆரம்பித்தார்.

கலை: அப்போ, ஆசிரியர்?

தேவி: அவர், தானே ஆசிரியராயிருந்து தொடங்கினார். அதோ

## 3

(பிள்ளைகளும், பெற்றோர்களும் வருதல், முன்பு வந்த பிள்ளைகள் இப்போது நல்ல உடையுடன் நெற்றியிலே திருநீறணிந்து சந்தனப்பொட்டுடன் கையில் புத்தகங்களும் கொண்டு வருதல்)
(அறிந்திடுவீர் தெரிந்திடுவீர் ...... என்ற மெட்டு)

ஏழூர்: நல்லவரே வல்லவரே எல்லோரும் வாரும் - இன்று
நல்லநாளில் பள்ளிக்கூடம் தொடங்குகிறோம் வாரும்.

உணவு தந்து உடையும் தந்து புத்தகமும் தருவோம் — உங்கள்
பிள்ளைகளை எம்மை நம்பிக் கொண்டு வந்து சேரும்

சிவா: பலகலைகள் தமிழ், சைவம் ஆங்கிலமும் கற்போம் - எங்கள்
பண்பாட்டில் கல்விகற்போம் பிள்ளைகளேவாரும்

கனகர்: தலை நிமிர்ந்து வாழ்ந்திடலாம் தயங்காமல்வாரும் -
எங்கள் தன்மானம் காத்திடலாம் எல்லோரும்வாரும்.

ஏழூர்: (வசனம்) - வாருங்கள் பிள்ளைகளே! முதலில் கடவுளை வணங்குவோம்.

(சொல்லிக் கொடுக்கச் சொல்லுதல்.)

ஆனைமுகன், ஆறுமுகன், அம்பிகை, பொன்னம்பலவன்
ஞானகுரு, வாணிபதம் நாடு.

மாதா பிதாகுரு தெய்வம் - அவர்
மலரடி தினம் தினம் வணங்குதல் செய்வோம் - மாதா

ஓதா திருப்பது தீது - நாங்கள்
ஓயாமற் கல்வியைக் கற்போம் எப்போதும் - மாதா

கலை: (வசனம்) - அம்மா, முன்னம் ஊத்தை உடுப்போடை வந்த பிள்ளைகளெல்லாம் இப்போ புதுச்சட்டையோடை வந்திருக்குதுகளே. யார் கொடுத்தார்களம்மா?

தேவி: ஏழூரர் தான். உடுப்பு மட்டுமல்ல, புத்தகமும் சாப்பாடும் கூடக் கொடுத்தார்.

கலை: எல்லாம் பெரியபிள்ளைகளாய்க்கிடக்கு இப்பதான் படிக்கத் தொடங்குகினமோ.

தேவி: படிக்க வசதி இல்லாததாலை இருந்துவிட்டார்கள். வளர்ந்தவர்களும் படிக்கத் தானே வேண்டும். எல்லார்க்கும் கல்வி கொடுக்கச் சேர்த்து விட்டார்.

# 4

*(வைகைக் கரை தேடியல்லோ ...... மெட்டு)*

கனகசபாபதி: அண்ணன் ஏழூர்வீடுநோக்கி - தம்பியரும் நானே - மிக
ஆசையுடன் போகிறனே சின்னவரும் நானே

அண்ணன் பள்ளிக்கூடத்திலே - தம்பியரும் நானே அங்கு
அவர்க்குதவி செய்யப்போறேன் தம்பியரும் நானே

ஏழூர்: என்னினிய தம்பியரே - சின்னவரே வாவா - நீயும்
எனக்குதவி செய்ய வேண்டும் - தம்பியரே வாவா.

படிப்பதற்குக் களவொளிக்கும் பிள்ளைகளைத்தேடி - நீயும்
பிடித்துவந்து படிக்கவைப்பாய் தம்பியரே வாவா.

கனகசபாபதி: வீடுவீடாய்த் தேடிச் சென்று அண்ணாவே நானும்-அந்த
வீணர்களைப் பிடித்துவந்து படிக்கவைப்பேன் அண்ணா

ஏழூர்: மரவள்ளிக்கிழங்கு சம்பல்- பாண்கடலை என்று நாங்கள்
மாணவர்க்கு உணவளிக்க வேண்டுவன செய்வாய்

கனகசபாபதி: சொன்னபடி செய்திடுவேன் - என்னருமை அண்ணா -
நானும் தொடங்கிடுவேன் என்பணியை என்னருமை அண்ணா -

(வசனம்) - அண்ணா நான் இப்பொழுதே சென்று, இன்று பள்ளிக்கு வராதோரைப் பிடித்து வருகிறேன்.

ஏழூர்: சென்று வா தம்பி

*(சின்னவர் இரண்டு கைகளிலும் இருமாணவரை இழுந்துவரல்)*

குமார்: வரமாட்டேன் ஐயா நான் வரமாட்டேன் - ஐயா நான்
வரமாட்டேன் வரமாட்டேனே.

கனகசபாதி: விடமாட்டேன் உன்னை நான் விடமாட்டேன்
உன்னை நான்விடமாட்டேன் விடமாட்டேனே.

பள்ளிக்குப் போகாமல் கள்ளத்தனம் பண்ண
விடமாட்டேன் விடமாட்டேனே.

கண்ணன்: படிக்கமுடியாது அடிச்சு நொருக்காதே
வரமாட்டேன் வரமாட்டேனே.

கனகசபாபதி: விடமாட்டேன் உங்களை விடமாட்டேன் - உங்களை
விடமாட்டேன் விடமாட்டேனே.

# 5

*(பாடசாலையில் வழிபாடு நடக்கிறது. சின்னவர் இவர்களையும் கொண்டுபோய் விடுதல் -*

எல்லோரும்: ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு

ஏழுர்: (வசனம்) அன்பர்களே! நாங்கள் எங்களை ஆதரிக்க கூடியவர்களின் வீடுகளுக்கு நவராத்திரி காலத்தில் பண்ணிசை பாடிச்சென்று பாடசாலைக்குப் பணம் சேர்த்து வருதல் வேண்டும்.

ஆசிரியர்: நல்லயோசனை ஐயா, அப்படியே செய்வோம்.

*(ஆசிரியர் சொல்லிக் கொடுக்க மாணவர் சொல்லுதல் வீடுவீடாய்ச் செல்லுதல்)*

கன்னித்திங்கள் வருகுது ஐயா கருத்துடன் நவராத்திரிக்கு
கண்ணகை அம்மன் பூஜைகள் செய்யக் காசு பணம் வேண்டும்
பொன்னைப்போலே நிறமுள்ள கனியும் பூமடைகாய் மடையாம்
புனிதாய் அப்பம் இளநீர் புஷ்பம் புனுகுசவ்வாதுடனே
வன்னப்பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் மாதாமனை தோறும்
வாங்குபணங்கள் அரிசிகள் கொண்டு வந்திடுங்கள் பூஜைக்கு
அன்னப்பரிமள குங்குமம் இதுகமழ் அழகிய மெய்யாளே
அம்பிகை கச்சிக்காமாக்கோட்டத்து அபிராமித்தாயே.

ஒருதந்தை: *(பணம் கொடுத்தல்)*

மெத்தமெத்த மெத்த நல்ல தொண்டு - நாங்கள்
மேன்மையுடன் உதவி செய்திடுவோம்.

ஒருதாய்: ஏழைகட்குக் கல்வி அறிவளித்தல் - இந்த
ஏழுலகும் கோடி புண்ணியமே.

ஏழுர் உள்ளவர்கள் செய்யும் உதவியினால் - இங்கு
இல்லாதோர்க்கும் கல்வி நாம் அளிப்போம்

எல்லோருமே எல்லாம் பெற்றுவாழ - நீங்கள்
எல்லோருமே தர்மம் செய்திடுவீர்

## 6

(நானும் ஆதிசிவன் ..... மெட்டு) கிண்டுபோட்டர் வருதல்)

கிண்டுபோட: நானும் கிண்டுபோட்டர் ராசரத்தினம் - இலங்கைச்
சைவவித்தியாவிருத்திச் சங்க மனேச்சர்
பாடசாலை மனேச்சர்

சைவர்வாளும் ஊர்கள் தோறும் - நாங்கள்
சைவப்பாடசாலைகட்டிக் கல்விதருவோம்
பதிவு செய்து தருவோம்

(வசனம்) – நீங்கள் தானே ஏழூர் இராசரத்தினம். நான் கிண்டுபோட் இராசரத்தினம். நாங்கள் சைவ வித்தியா விருத்திச்சங்க மூலம் சைவப்பாடசாலைகள் கட்டிப் பதிவு செய்து வருகிறோம். நீங்கள் இங்கொரு சைவப் பாடசாலை நடத்துவதாக அறிந்து உங்களைப் பார்க்க வந்தேன்.

ஏழூர்: (வசனம்) வணக்கம் ஐயா உங்கள் வரவு நல்வரவாகுக. எங்கள் பாடசாலையையும் பதிவு செய்து தருவீர்களா

கிண்டு: (வசனம்) அதற்காகத் தானே உங்களைத் தேடி வந்தேன். பதிவு செய்து உங்கள் ஆசிரியர்களுக்கு அரசாங்கம் சம்பளம் கொடுக்க வழி செய்வோம்.

ஏழூர்: நானும் கும்பிடப்போன தெய்வம் - ஐயா
கோடி நமஸ்காரம் செய்தேன் தேடியே வந்தீர்
உம்மை நாடியே நின்றேன்

கிண்டு: இரட்டை ராச ரத்தினங்கள் - நாங்கள்
கிண்டுபோட்டர் - ஏழூர் என்று எங்களைச் சொல்வார்
நல்ல காரியம் வெல்வோம்.

(வசனம்)–ஏழூர்! உங்கள் பாடசாலைக்கு ஒரு நிரந்தரக் கட்டிடம் அமைக்க ஆவன செய்யுங்கள்

ஏழூர்: ஆகட்டும் முயற்சிக்கின்றேன்.

கலை: யாருடைய காணியில் கட்டினார்கள் அம்மா.

தேவி: (வசனம்) வள்ளல் ஏழூர் இராசரத்தினம் அவர்கள் தன்னுடைய 28 பரப்புக் காணியையும் பாடசாலைக்குக் கொடுத்து நல்லமனம் படைத்தோரின் உதவியுடன் பாடசாலையைக் கட்டினார். பாடசாலைக்கு ஓடுபோடப் பணம் இல்லையே என்று மனம்வாடினார். அப்போது'

# 7

(அறிந்தீடுவீர் தெரிந்திடுவீர் ......................)

ஏழூர்: என்னவளே என் துணையே என்னவளே கேளாய் - இங்கு
எனக்குவந்த துன்பமொன்று என்னவளே கேளாய்

சின்ன: என் துணைவா என்னவரே என்னதுயர் என்று - நீரும்
எனக்குரைப்பீர் என்னாலே ஆனதெல்லாம் செய்வேன்

ஏழூர் நல்லவர்கள் பெரியவர்கள் உதவியுடன் இங்கு - நானும்
நல்லதொரு பாடசாலை கட்டிவிட்டேன் இன்று

கூரையோடு போடுதற்கு ஏதும் வழியில்லை - எந்தன்
குலமகளே என்னவளே ஏதும்வழி சொல்வாய்

சின்ன: கையினிலே வெண்ணெய் வைத்து நெய்க்கலையவாமோ
என்றன் கணவரேநும் மாங்கல்யம் கைகொடுக்குமன்றோ.

ஏழூர்: மாங்கல்யமா மாங்கல்யமா மங்கையரே முறையா -
உன்றன் மாங்கல்யத்தை விற்று ஓடு போடுவது முறையா.

சின்ன: பல்லாயிரம் ஏழைகட்குக் கல்விநிழல் கொடுக்கும் -
அந்தப் பாக்கியத்தை எங்களுக்கு மாங்கல்யமே
கொடுக்கும்.

ஏழூர்: (வசனம்) நீ அதிசயமான தெய்வப் பெண்ணம்மா உன் தியாகத்தின் நிழலிற்கூட நாம் நிற்கமுடியாது.

(மாங்கல்யத்தை வாங்குதல்)

கலை: (வசனம்) அந்த அம்மா தாலிக் கொடியையே கொடுத்தாவா?

தேவி: ஆமெடி கண்ணே! அதோ அந்த ஏழூர் மண்டபக் கூரை ஓடுகள் அந்தத்தாலிக்கொடிதந்த பாக்கியமடி

கலை: அவர்கள் இப்பவும் இருக்கிறார்களோ.

தேவி: வள்ளல் ஏழுர் 1949 தீபத்திருநாளில் தெய்வமாகி விட்டார். அவரின் இடத்துக்கு வள்ளலாக அவர் மகள் கிருபாசக்தி இருக்கிறார் அதோ!

## 8

### கிருபாசத்தி வருதல்

கறுப்புடுத்துக் கச்சைகட்டி ... ... ... ... மெட்டு

கிருபா: வள்ளல் ஏழுர் செல்வமகள் கிருபாசக்தி நானே - அவ
வாறாவாம் வாறாவாம் வள்ளல் பள்ளிக்கூடம்

அன்னை தந்தை செய்த பெரும் புண்ணியத்தினாலே அவர்
ஆக்கிவைத்த பள்ளிக்கூடம் பார்க்கவென எண்ணி

அதிபர்: வரவேண்டும் வரவேண்டும் வள்ளல் திருமகளே - உங்கள்
வரவு நல்லவரவாக வரவேண்டும் அம்மா

பெற்றவர்கள் செய்ததவம் பெருகிவளர்ந்திருக்கு - இந்தப்
பெருமையெல்லாம் பார்த்திடுவீர் பெண்ணரசி நீரே

கிரு: வாயிலிலே சரஸ்வதியின் வரவேற்பைக் கண்டேன் -இங்கு
வானுயர்ந்த மாடியொடு மண்டபங்கள் கண்டேன்

தெய்வீக நிழலில் கல்வித்தேன்சொரியக் கண்டேன் - இன்னும்
தேவையென்ன சொல்லிடுவீர் செய்துதருவேன் நான்

அதிபர்: உளமகிழ்ந்து மாணவர்கள் ஓடிவிளையாட ஒரு
விளையாட்டு மைதானம் வேண்டும் அம்மா தாயே

கிருபா: தந்திடுவேன் தந்திடுவேன் காணியொன்று நானே
- நீங்கள் தகுந்தவிளை யாட்டரங்கு ஆக்கிமகிழ்வீரே.

அதிபர்: தந்தைவள்ளல் தாயும்வள்ளல் பிள்ளையுமேவள்ளல் - இந்தத்
தங்கமனம் நிலைக்குமம்மா சரித்திரத்தில் என்றும்
மண்ணும்விண்ணும் உள்ளவரை மாதரசே உங்கள்
மகிமைசொல்லி நன்றிசொல்லி மனமகிழ்ந்து
தொழுவோம்.

கலை: (வசனம்) - இந்தப்பெரிய விளையாட்டு மைதானம் இவதந்ததா அம்மா.

தேவி: ஆமாம். இவர்களுக்கு எந்தப் பெரிய மனம் என்று பார்த்தாயா

கலை: அப்ப இந்தச்சிலை ஏழூரின் தங்கச்சிலை தானே

தேவி: தங்கச்சிலை தங்கச்சிலை தங்கச்சியே பார்நீ - ஏழூர்
தாள்களிலே நாம் பணிந்தால் எண்ணியது கிடைக்கும்

கலை: தங்கமான பாடசாலை மெய்கண்டானில் தானே
இந்தத் தரணி புகழ் கல்வி கற்று உயர்வடைவேன்
நானே.

மங்களம்

எல்லோரும்: மங்களமாம் மங்களமாம் எங்கள்
ஏழூரர்க்கு மங்களமாம்
மங்களமாம் மங்களமாம் - எங்கள்
சபையோர்க்கு மங்களமாம்
மங்களமாம் மங்களமாம் - எங்கள்
கலைஞர்கட்கு மங்களமாம்.

# வள்ளல் ஏழூர்

*சிந்துநடைக் கூத்து*

## நூல்வெளியீடும் காட்சிப்படுத்தலும்

*தலைவர்*

**திரு. அ. பேரம்பலம் அதிபர்**

*முதன்மை விருந்தினர்*

**சங்கீத பூஷணம் சு. கணபதிப்பிள்ளை அவர்கள்**
*(ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளர்)*

*வெளியீட்டுரை*

**கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள்**

*ஆய்வுரை*

**திரு. பொ. அருந்தவநாதன் அவர்கள்**
*(யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர்)*

**திரு. ச. கிருபாநந்தன் அவர்கள்**
*(அருணோதயாக் கல்லூரி ஆசிரியர்)*

---

பாரதி பதிப்பகம், 430, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்: 3081